# கடந்த இரு நாட்களில் 7 பேர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகியுள்ளனர்!

## அம்பிகா சற்குணநாதன் தெரிவிப்பு

**கடந்த 2 நாட்களில் பரீட்சைக்குத் தோற்றும் இளைஞர் உட்பட 7 பேர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ய**

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள இளைஞர் உட்பட 7 பேர் கடந்த இரு நாட்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

மாவீரர் நினைவேந்தல் நிகழ்விற்கு வாகனங்கள், மின்பிறப்பாக்கி மற்றும் ஒலிபெருக்கிகளை வாடகைக்கு எடுத்ததற்காக சிலர் கைது செய்யப்பட்டனர். மற்றவர்கள் நவம்பர் 27 அன்று சிவப்பு, மஞ்சள் கொடிகள் மற்றும் ஒலிபெருக்கிகளை கொண்டு சென்றதற்காகக் கைது செய்யப்பட்டனர்.

இதில் பலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் நாட்களில் மேலும் சிலரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பயங்கரவாதம் என வரையறுக்கப்படாத, வாகனங்களை வாடகைக்கு எடுக்கும் செயல் கூட பயங்கரவாதமாகக் கூறப்பட்டுள்ளதா? என்று அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நினைவு கூருபவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைப்பது, அரசாங்கத்தின் மீதான தமிழர்களின் அவநம்பிக்கையை மேலும் அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 14 வியாழக்கிழமை 30.11.2023 கதிர் 124



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## இலாபம் இல்லையேல் போக்குவரத்து சபையும் தனியார் மயப்படுத்த வேண்டியிருக்குமாம்!

### அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



2024 ஆம் ஆண்டுக்குள் இலங்கை போக்குவரத்துச் சபை இலாபம் ஈட்டாவிட்டால், அதனையும் தனியார் மயமாக்க வேண்டியிருக்கும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அத்தகைய ஆபத்தை தவிர்க்கும் வகையில் இலங்கை போக்குவரத்து சபையை இலாபகரமான நிறுவனமாக மாற்றுவதற்கான வழிவகைகளை 2➤

## ரொஷான் ரணசிங்கவுக்கு எதிரான மனு ஜனவரி 3 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறப்படும் முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மனு எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்றைய நடவடிக்கைகளின் போது, ஆட்சேபனைகள் ஏதேனும் இருந்தால் டிசம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் ரொஷான் ரணசிங்கவுக்கு அறிவுறுத்தியது.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது முன்னாள் அமைச்சர் தெரிவித்த கருத்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும், அவரது தொழில் மற்றும் 2➤

## மட்டக்களப்பு சிறைச்சாலையிலும் கைதியொருவர் திடீரென மரணம்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட சிறைக் கைதியொருவர் திடீரென மரணமடைந்துள்ள சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கொக்கட்டிச்சோலை முனைக்காடு பிரதேசத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சோமசுந்தரம் துரைராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவருக்கு நேற்று முன்தினம் திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாகவும், இதனையடுத்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2➤

## வடக்கில் தட்டுப்பாடற்ற சீனி விநியோகத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

வடக்கு மாகாணத்தில் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சீனி விநியோகத்தினை சீர்செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கில் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மேற்கொள்வதற்கு போதியளவு சீனி இல்லாமல் இருப்பதாக பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் வடக்கு மாகாணத்திற்கு பொறுப்பான பொது முகாமையாளரினால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக, துறைசார் அமைச்சருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடிய நிலையில், மேலதிகமாக 100 மெற்றிக்தொன் சீனியை அனுப்புவதற்கான தீர்மானம் 2➤

## சாரதி அனுமதிப்பத்திரங்கள் 6 மாதங்களுள் வழங்கப்படும்

வழங்கப்படாத நிலையில் குவிந்துக் கிடக்கின்ற விண்ணப்பங்களுக்குரிய சாரதி அனுமதி பத்திரங்கள் இன்னும் 6 மாதங்களுக்குள் வழங்கப்படும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தெரிவித்துள்ள மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க, இதுவரை 9 இலட்சத்திற்கும் அதிகமான சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் குவிந்துள்ளதாகவும், சாரதி அனுமதி பத்திரங்களை அச்சிட தேவையான அச்சு இயந்திரங்கள் இல்லாமையின் காரணமாகவே இவ்வாறு சாரதி அனுமதிபத்திர விண்ணப்பங்கள் குவிந்துள்ளதாகவும் 2➤

## யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையில் தொலைபேசித் திருட்டில் ஈடுபட்டவர்கள் கைது!

யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையில் கடந்த சில நாட்களாக வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் நோயாளர்களை பார்வையிட வருபவர்களின் கைத்தொலைபேசிகளை திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் உதவி பொலிஸ் பரிசோதகர் மதுரபெரும தலைமையிலான அணியினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைத்தொலைபேசித் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் திருடப்பட்ட கைத்தொலைபேசியினை வாங்கிய குற்றச்சாட்டில் ஊர்காவற்துறைபகுதியைச் சேர்ந்த ஒருவரையும் யாழ் குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளார்கள்.

அவர்கள், வைத்தியசாலையில் கடந்த மூன்று நாட்களுக்குள் திருடப்பட்ட பெறுமதியான கைத்தொலைபேசிகளையும் மீட்டுள்ளனர்.

அண்மைய காலத்தில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் தமது கைத்தொலைபேசிகளை யாராவது திருட்டுக்கொடுத்திருந்தால், அவர்களை நேரடியாக வந்து உரிய ஆவணங்களையும் ஆதாரங்களையும் காட்டி, பெற்றுக் கொள்ள முடியும் என குற்றத்தடுப்பு பிரிவினர் அறிவித்துள்ளனர். (01)

# சுற்றுச்சூழல் தொடர்பான கலந்துரையாடல் முன்னிலை பெற்றுள்ளது – அமைச்சர் கெஹலிய!



வெப்ப வலய நாடுகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் நிகழ்ச்சி நிரல் தற்போது மாறி வருகின்றது. இன்று உலகிலுள்ள ஒவ்வொரு தளத்திலும் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை பிரதான தலைப்புகளாகும்.

ஆனால், இன்றைய நிலைவரப்படி சுற்றுச்சூழல் தொடர்பான கலந்துரையாடல் முன்னிலைக்கு வந்துள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்புக்கு முக்கிய காரணம், சுற்றுச்சூழல் குறித்து சரியான கவனம் செலுத்தப்படாமையாகும்.

மனிதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் கேடு கணக்கிட முடியாதது.

கைத்தொழில் புரட்சியின் போது சுற்றுச்சூழலில் சரியான கவனம் செலுத்தாததன் விளைவை இன்று அனுபவித்து வருகிறோம்.

2015 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் நடைமுறையில் செயற்படுத்தப்படவில்லை. அதனால் வெப்ப வலய நாடுகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் செயற்பாடுகளால் வெப்ப வலய நாடுகள் பாரிய நட்டத்தைச் சந்தித்துள்ளன.

எனவே, ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டையும் மிஞ்சிய பெறுமதி இம்முறை சுற்றுச் சூழல் மாநாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் பாதிப்புக்கு எதிராக வலுவான சூழலைக் கட்டமைக்க வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது, என அவர் தெரிவித்தார்.

# வவுனியா செட்டிகுளத்தில் வயதான தம்பதி கொலை

வவுனியா செட்டிகுளம் பகுதியில் வயது முதிர்ந்த தம்பதியினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் எனவும், சடலங்களுக்கு அருகில் மூன்று கத்திகள் மீட்கப்பட்டுள்ளதால் அவர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த வீட்டில் இருந்து 5 பவுண் பெறுமதியான நகையும் காணாமற் போயுள்ளதால் திருட்டில் ஈடுபடும்போது இக்கொலை இடம்பெற்றிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.









## மட்டக்களப்பு சிறைச்சாலையிலும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையின் போது அவரது உடலில் காயங்கள் உள்ளமை தெரிய வந்துள்ளது.

இதையடுத்து இது குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலாபம் இல்லையேல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வருடம் பல டிஜிட்டல் திட்டங்களை நடைமுறைப்படுத்த இலங்கை போக்குவரத்து சபை திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், இலங்கை போக்குவரத்து சபையில் நிலவும் மோசடிகள் மற்றும் ஊழல்களை விசாரணை செய்வதற்கு விசேட பிரிவொன்றை நிறுவியுள்ளதாகவும், மேல்மாகாணத்திற்கு பொறுப்பாக இருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முன்னாள் பணிப்பாளர் இதன் தலைவராக செயற்படுவார் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ரெ-51)

## சாரதி அனுமதிப்பத்திரங்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

இதேவேளை, தற்போது மூன்று புதிய அச்சு இயந்திரங்கள் கிடைத்துள்ளதாகவும், அதனால் இந்த வாரம் முதல் அச்சடிக்கும் பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையினால் இன்னும் 6 மாதங்களுள் குறித்த சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் எனவும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ரெ-50)

## வடக்கில் தட்டுப்பாடற ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சீனியை வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற 48 பல நோக்கு கூட்டுறவு சங்கங்களின் ஊடாகவும் நியாயமான விலையில் மக்களுக்கு விநியோகிப்பது தொடர்பான ஆலோசனைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (O1)

## ரொஷான் ரணசிங்கவுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்புக்கும் பாதகமானது எனக் கூறி, சட்டத்தரணி திமித்ரி ஷிராஸ் அகஸ்டஸ் பியட்ராங்கேலி இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இதேவேளை, நாடாளுமன்ற மரபுப்படி, நாட்டின் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குறித்து இதுபோன்ற அறிக்கைகளை வெளியிட முடியாது என்று மனுவில் கூறப்பட்டுள்ளது. (த)


## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி – மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




காலைக்கதிர் TV YouTube தளம்

# கல்முனை பிரதேச கடலரிப்பு ஹரீஸ் எம்.பி நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை தொகுதியில் சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பை தொடர்ந்து இப்போது கல்முனை பிரதேசத்தில் கடலரிப்பு ஆரம்பித்துள்ளது. கலரிப்பின் பாதிப்பு நிலை தொடர்பில் மீனவ அமைப்புக்கள் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களின் போது இது சம்பந்தமாகவும் ஜனாதிபதி செயலாளர், அரச உயர்மட்டங்கள், குறித்த இலாகாவுக்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் எடுத்துக் கூறியிருந்தார்.

அதன் பயனாக கரையோரம் பேணல் திணைக்கள கிழக்கு மாகாண பொறியியலாளர் எம்.துளசிதாசனை தொடர்புகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் முன்வைத்த வேண்டுகோளின் பிரகாரம் கல்முனைக்கு இன்று (30) களவிஜயம் மேற்கொண்ட மாகாண பொறியியலாளர் எம். துளசிதாசன் அவர்கள் கரையோரம் பேணல் திணைக்கள கல்முனை பிரதேச செயலகத்திற்கான அதிகாரி எம்.எச்.மப்ரூக், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களின் பிரதிநிதிகள், அம்பாறை மாவட்ட ஆழ் கடல் இயந்திரப் படகு மீன்பிடி உரிமையாளர் மீனவர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம்.எஸ். அப்துல் ஹமீட் (நஸீர்), மீனவர் சங்க பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியதுடன் இவ்வேலைத்திட்டம் முன்னெடுப்பது சம்பந்தமான மதிப்பீட்டறிக்கையை விரைவாக செய்து இவ் வேலைத்திட்டத்தை அவசரமாக முன்னெடுக்க தயாராக உள்ளதாக தெரிவித்தார்.



இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க தேவையான நிதியை பெறுவது தொடர்பில் வரவு செலவு திட்டத்திற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# செடோ சிறிலங்கா நிறுவனத்தின் செயற்திட்ட இரு வருட நிறைவு




(கற்பிட்டி - எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி - குறிஞ்சிப்பிட்டியில் இயங்கி வரும் " செடோ சிறிலங்கா " நிறுவனம் யூ.எஸ் எயிட் நிறுவனத்தின் நிதியுதவியின் ஊடாக சேப் பவுண்டேஷனின் வழிகாட்டலின் கீழ் "மனித வியாபாரம் மற்றும் மனித ஆட்கடத்தல்" தொடர்பான மக்களுக்கு அறிவூட்டும் ஐந்து வருட செயற்திட்டத்தை கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஆனைவாசல், குறிஞ்சிப்பிட்டி வடக்கு, குறிஞ்சிப்பிட்டி தெற்கு, கண்டக்குளி, பள்ளிவாசல்துறை ஆகிய ஐந்து கிராம சேவையார் பிரிவுகளிலும் கடந்த இரண்டு வருடங்களாக செயற்படுத்தி வருகின்றது.

மேற்படி செயற்திட்டத்தின் இரண்டு வருட நிறைவின் முன்னேற்ற செயற்பாடு மற்றும் பிரச்சினைகள், கள விஜயத்தின் போது எதிர்நோக்கும் சவால்கள் பற்றி கலந்துரையாடும் முகமாக நிறுவனங்களின் அபிவிருத்தி இணைப்பாளர் அர்ஷத் மற்றும் நெதர்லாந்து பல்கலைக்கழகத்தின் இரு மாணவர்கள் செடோ சிறிலங்கா நிறுவனத்திற்கு விஜயம் செய்து கலந்துரையாடினர்.

மூன்றாவது வருடத்திற்கான செயற்பாடு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் என நிறுவனங்களின் அபிவிருத்தி இணைபாபாளர் உறுதியளித்ததாகவும் செடோ சிறிலங்கா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.ஆர் முனாஸ் தெரிவித்தார்.

# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு அமெரிக்க மருத்துவ அமைப்பு உதவி




(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு பல்வேறு வழிகளில் உதவிக்கரம் நீட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பு (International Medical Health Organization) மீண்டும் நன்கொடை வழங்கியுள்ளது.

வைத்தியசாலையின் நோயாளிகளுக்கும் நோயாளிகளின் உதவியாளர்களுக்காகவும் 250 பிளாஸ்ரிக் கதிரைகள் மற்றும் 300 தலையணைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி இரா. முரளீஸ்வரனின் வேண்டுகோளின் பேரில் அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரான எல்.பிரதீப்காந்த்தினால் வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் வைத்து இந்த உதவிகள் கையளிக்கப்பட்டன.

இந்த நன்கொடை கையளிக்கும் நிகழ்வில் வைத்தியசாலை நீரிழிவு முகாமைத்துவ வைத்தியர் டொக்டர் கே. ரிஷி கேஸ், தாதிய பரிபாலகர் என்.சசிதரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி.தேவஅருள், நீரிழிவு முகாமைத்துவ தடுப்பு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. கே. மனோஜினி மற்றும் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.



மாலைக்கதிர்
Maalaikkathir



# ஹமாஸ் படையினரிடம் பிணைக் கைதிகளாக இருந்த 97 பேர் இதுவரை விடுவிக்கப்பட்டனர்





ஹமாஸ் படையினர் பிணைக் கைதிகளாக வைத்திருந்த 97 பேர் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய ஹமாஸ் படையினர் பெண்கள், குழந்தைகள் உள்பட 240க்கும் அதிகமானோரைக் பிணைக் கைதிகளாகக் கடத்திச் சென்றதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

அவர்களை மீட்கவும் ஹமாஸை அழிக்கவும் இஸ்ரேல் படையினர் காஸா நகரின் மீது ஒரு மாதத்துக்கும் மேல் கடுமையான தாக்குதலை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து, கட்டார் நாட்டின் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், 50 பிணைக் கைதிகளை விடுவிக்க 4 நாள்கள் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று ஹமாஸ் படையினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையே ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, கடந்த புதன்கிழமை முதல் 4 நாள்களுக்கு 50 பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். தொடர்ந்து, கூடுதலாக ஒவ்வொரு நாள் போர் நிறுத்துவதற்கு 10 பிணைக் கைதிகள் விடுவிக்க வேண்டும் என்று இஸ்ரேல் தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை வரை 81 பிணைக் கைதிகளை ஹமாஸ் படையினர் விடுவித் திருந்தனர்.

இந்த நிலையில், நேற்று நள்ளிரவு இஸ்ரேல் நாட்டின் பெண்கள், குழந்தைகள் 10 பேர், தாய்லாந்தின் 4 பேர், ரஷ்யாவின் 2 பேர் என மொத்தம் 16 பேரை ஹமாஸ் விடுதலை செய்தது.

இதனைத் தொடர்ந்து, இஸ்ரேல் சிறைகளில் உள்ள 30 பாலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் அரசு இன்று அதிகாலை விடுதலை செய்துள்ளது.

மேலும் சில நாட்கள் போர் நிறுத்தத்தை நீடித்து, பிணைக் கைதிகள் அனைவரையும் விடுவிக்க இஸ்ரேல் அரசு முனைப்புக் காட்டி வருகின்றது. (04)

## கடந்த ஆண்டில் 1.4 லட்சத்துக்கும் அதிக இந்திய மாணவர்களுக்கு அமெரிக்க விசா

கடந்த ஆண்டில் 1.4 லட்சத்துக்கும் அதிகமான இந்திய மாணவர்களுக்கு விசா வழங்கப்பட்டதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் விசா சேவை பிரிவுகளுக்கான துணை உதவியமைச்சா் ஜூலி ஸ்டஃப்ட் தெரிவித்துள்ளார்.

விசா நேர்காணலுக்கான காத்திருப்பு காலத்தைக் குறைக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன வும்அவர் கூறினார்.

இது தொடர்பாக பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு ஜூலி ஸ்டஃப்ட் அளித்த பேட்டியின்போது,

அமெரிக்காவில் வகுப்புகள் தொடங்குவதற்கு முன்பாகவே இந்திய மாணவர்களுக்கு விசா வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக, இந்தியாவில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகங்கள் வாரத்தில் 6 நாட்கள் மாணவர்களுக்கு நேர்காணல் நடத்தின.

வரலாற்றில் முதல்முறையாக, பத்து லட்சம் இந்தியர்களுக்கு விசா வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். சில மாதங்களுக்கு முன்பாகவே இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அந்த இலக்கை அடைந்துள்ளோம். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்.

அமெரிக்காவில் உள்ள வெளிநாட்டு மாணவர்கள், தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகிய பிரிவுகளில் எண்ணிக்கையில் இந்தியர்களே முதலிடத்தில் உள்ளனர். சுமார் 1.4 லட்சம் இந்திய மாணவர்களுக்கு கடந்த ஆண்டில் விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியாற்றும் வெளிநாட்டினருக்கான எச்1-பி விசாக்களில் சில பிரிவுகளைப் புதுப்பிக்க சோதனை முறையிலான திட்டம் டிசம்பர் மாதத்தில் தொடங்கப்படும். இதனால், விசாவைப் புதுப்பிக்க தங்கள் நாடுகளுக்கு அவர்கள் செல்ல வேண்டியதில்லை. அமெரிக்காவில் உள்ள தொழிநுட்பப் பணியாளர்களில் பெரும்பாலானோர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். இந்தத் திட்டத்தினால் அவர்கள் பெரிதும் பலனடைவார்கள், என்று தெரிவித்துள்ளார். (04)

## புர்கினா பாஸோவில் தாக்குதல் பொதுமக்கள் 40 பேர் படுகொலை



மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாஸோவில் அல்-கொய்தாவுடன் தொடர்புடைய பயங்கரவாதிகளால் பொதுமக்கள் 40 பேர் படுகொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையம் தகவல் வெளியிட்டுள்ளது. அதில், புர்கினா பாஸோவில், மாலி எல்லையையொட்டிய ஸேபோ நகரைக் கைப்பற்றுவதற்காக அல்-கொய்தாவுடன் தொடர்புடைய ஜேஎன்ஜஐஎம் என்ற பயங்கரவாத அமைப்பினர் அந்த நகரை ஓராண்டுக்கும் மேல் முற்றுகையிட்டுள்ளனர்.

இந்த நிலையில், நகருக்குள் நுழைந்து அவர்கள் ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தினர். இதில் பொதுமக்கள் 40 பேர் உயிரிழந்தனர். 42 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலின்போது ஜேஎன்ஜஐஎம் அமைப்பினர் பொதுமக்களை வேண்டுமென்றே குறிவைத்துத் தாக்கியது போர்க் குற்றமாகும், என்று அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

அல்-கொய்தா மற்றும் இஸ்லாமிய தேசங்கள் சிலவற்றின் ஆதரவு பெற்ற பகுழுவினர் புர்கினா பாஸோவின் சுமார் 50 சதவீத பரப்பை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். அவர்களது தாக்குதலில் இதுவரை ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்து, சுமார் 20 லட்சம் பேர் புலம் பெயர்ந்து தவித்து வருவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. (04)

## ஊழல் வழக்கிலிருந்து பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் உயர் நீதிமன்றத்தினால் விடுவிப்பு



அவென்பீல்ட் ஊழல் வழக்கிலிருந்து பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃபை இஸ்லாபாத் உயர்நீதிமன்றம் விடுவித்துள்ளது.

அந்த நாட்டில் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து நீதிபதிகள் அமீர் ஃபரூக், மியான்குல் ஹஸன் ஔரங்கசீப் ஆகியோர் அடங்கிய அமர்வு வெளியிட்டுள்ள தீர்ப்பில், அவென்பீல்ட் வழக்கில் நவாஸ் ஷெரீஃப்புக்கு எதிரான முறையீட்டை தேசிய ஊழல் தடுப்பு அமைப்பு திரும்பப் பெற்றுள்ளதால் அந்த வழக்கிலிருந்து அவரை விடுவிக்கும் கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்தனர்.

பாகிஸ்தானின் 12 ஆவது, 14 ஆவது மற்றும் 20 ஆவது பிரதமராக பதவி வகித்து வந்த நவாஸ் ஷெரீஃப் (73), பனாமா ஆவண முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டில், உச்சநீதிமன்றத்தால் கடந்த 2017 ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, அல்-அஜீஸியா உள்ளிட்ட ஊழல் வழக்குகளில் நவாஸ் ஷெரீஃபுக்கு ஊழல் தடுப்பு நீதிமன்றம் கடந்த 2018 இல் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

சிகிச்சைக்காக கடந்த 2019 ஒக்டோபரில் லண்டனுக்குச் சென்ற நவாஸ் ஷெரீஃப் அங்கேயே தங்கி விட்டார். அவரை தப்பியோடிய குற்றவாளியாக நீதிமன்றம் அறிவித்தது.

அப்போது நாட்டின் பிரதமராக இருந்த இம்ரான் கான், நாடாளுமன்றத்தால் கடந்த 2022 ஆம் ஆண்டு பதவியிலிருந்து அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, நவாஸ் ஷெரீஃபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சியின் தலைமையில் ஆட்சி மீண்டும் அமைந்தது.

தற்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு இடைக் கால ஆட்சி நடைபெற்று வரும் நிலையில், நவாஸ் ஷெரீஃப் கடந்த மாதம் நாடு திரும்பியிருந்தார். (04)

# பெண் தலைவிகளை வலுவூட்டும் இரு நாள் செயலமர்வு சம்மாந்துறைப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில்



(அஸ்ஹர் ஆதம்)

சேர்ஜ்.போ கொமண்ட் கிரௌண்ட் நிறுவனமும் சம்மாந்துறை வில் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த பெண் தலைவிகளை வலுவூட்டும் இரு நாள் செயலமர்வு அண்மையில் இடம் பெற்றது.

சம்மாந்துறைப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 20 பெண் தலைவிகள் கலந்து கொண்டதுடன், வளவாளர்களினால் இஸ்லாமிய விவாக, விவாகரத்துச் சட்டம், அடிப்படை மனித உரிமைகள், குடும்பப் பிரச்சினைகளின் அடிப்படை உருவாக்கம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இஸ்லாமிய திருமண வாழ்க்கை தொடர்பாகவும் போதைப் பொருள் பயன்பாடு தொடர்பாகவும் இங்கு விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வளவாளர்களாக மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.அப்துல் அஸீஸ், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம். றஸாட், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெஸீலா நஸ்ரி, உளவளத்துணை உத்தியோகத்தர் எம்.எப்.பர்ஸானா, உளவளத்துணையாளர் அல் ஆலிமா பாஹினா முஸ்தபா, சேர்ஜ்.போ கொமண்ட் கிரௌண்டநிறுவன திட்ட ஆலோசகர் திருமதி கமலவாணி சுதாகரன், வில் கழக முக்கியஸதர் எஸ்.எ..எஸ்.நிலோபா உட்பட .பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இப்பயிற்சி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் நிகழ்வு மற்றும் வளவாளர்கள் மற்றும் பல் தரப்பு அங்கத்தினர்கள், வில் கழக உறுப்பினர்கள் கௌரவிப்பு நிகழ்வும் சம்மாந்துறை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபாவும் சிறப்பு ப்பேச்சாளராக பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஏ.எம்.எம்.நௌசாட் மற்றும் திட்ட உதவியாளர் கே. றாஜலட்சுமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவுள்ள உபகரணப் பொதிகள்

(கே.எ.ஹமீட்)

இலங்கைப் பத்திரிகையாளர் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நாடளாவிய ரீதியிலுள்ள ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியினை இலங்கை பத்திரிகையாளர் பேரவை வழங்கத் தீர்மானித்துள்ளதாக அதன் உதவிப் பத்திரிகை ஆணையாளர் தில்ஹானி விஜேரத்ன தெரிவித்தார்.

தரமான ஊடக கலாசாரத்தை உருவாக்கி, ஊடகவியலாளர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்களின் ஊடகப் பணியினை முன்னெடுத்துச் செல்லும் ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு சலுகை முறையில் இப்பொதிகளை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் இப்பொதியினைப் பெற்றுக்கொள்ளும் ஊடகவியலாளர்களுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல 58 இல் அமைந்துள்ள வங்கி கற்கைகளுக்கான நிலையத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பிரதம அதிதியாக கலந்துகொண்டு இப்பொதிகளை வழங்கி வைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பொதிகளை பெற்றுக்கொள்ள வருகின்ற ஊடகவியலாளர்கள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஊடக அடையாள அட்டை அல்லது ஊடக நிறுவனத்தால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் இப்பொதியை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை பத்திரிகையாளர் பேரவையினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தையும் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஊடகவியலாளர் களுக்குரிய பொதிகளை அவர்களே முன்வந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எதிர்வரும் மாதம் டிசம்பர் 6 ஆம் திகதிக்கு முன்னர் தங்களின் வரவை 011-2693271 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.




# கல்முனை வலய மாணவர் நாடாளுமன்றம் அமர்வு





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலய மாணவர் நாடாளுமன்ற அமர்வு ,கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் நேற்று சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனை வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முதல் அமர்வில் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு இடையில் தேர்தல் முறையில் தெரிவு செய்யப்பட்ட மாணவ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற நடைமுறைகள் தொடர்பில் விளக்கிய இந்த முதல் அமர்வில், வலய கல்விப் பணிமனை அதிகாரிகளும் பாடசாலைகளின் பொறுப்பு ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் கல்முனை வலய மாணவர் நாடாளுமன்றத்தின் செயலராக தலைமை வகித்தார்.

இந்நிகழ்விற்கு தலைமை வகித்த கல்முனை வலய கல்விப் பணிப்பாளரின் விளக்க உரையை தொடர்ந்து மாணவ நாடாளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வும், மாணவ நாடாளுமன்ற சபாநாயகரின் உரையும், மாணவ நாடாளுமன்றின் 10 அமைச்சர்களின் உரையும் இடம்பெற்றதன.




## தென்னாசியாவிலேயே முதல் முறையாக நேபாளில் சம பாலினத் திருமணப் பதிவு



தென்னாசியாவிலேயே முதல் முறையாக, சம பாலினத் திருமணங்களை அதிகாரபூர்வமாகப் பதிவு செய்யும் நடைமுறை நேபாளத்தில் நேற்று தொடங்கப்பட்டது.

நேபாளத்தில் சம பாலினத் திருமணங்களுக்கு அந்த நாட்டு உச்சநீதிமன்றம் கடந்த 2007 ஆம் ஆண்டே அனுமதி அளித்தது. பின்னர் 2015 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டத்திலும் பாலினத் தேர்வின் அடிப்படையில் மக்களிடையே பாகுபாடு காட்டக்கூடாது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், மாயா குருங் என்ற திருநங்கைக்கும், சுரேந்திர பாண்டே என்ற சமபாலின சேர்க்கையாளருக்கும் இடையே சட்டபூர்வமாக நடைபெற்ற திருமணத்தை பதிவு செய்ய அதிகாரிகள் மறுத்துவிட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர்.

அந்த மனுவையும் இதுபோன்ற பிற மனுக்களையும் விசாரித்த நீதிமன்றம், சம பாலினத் திருமணங்களுக்கு கடந்த ஜூன் மாதம் சட்ட அங்கீகாரம் அளித்து உத்தரவு பிறப்பித்தது. (04)

## திருமறைக் கலாமன்றத் தினம் ஞாயிறன்று பல்வேறு நிகழ்வுகள்

கலைப்பணியில் 58 ஆண்டுகளை நிறைவு செய்து 59 ஆவது ஆண்டில் கால் பதிக்கும் திருமறைக் கலாமன்றத்தின் தினம் வரும் டிசம்பர் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பிக்கப்படுவதை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.


காலை 7 மணிக்கு இல.17,மார்ட்டின் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபியான இல்லத்தில் நன்றி வழிபாடு இடம்பெறும். தொடர்ந்து மு.ப.10 மணிக்கு இல.238 ,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் மன்ற அலுவலகம் அருகில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.

இல.286,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுகளுக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் கி.கந்தவேள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனங்கள், அண்மையில் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்ட யாழ்ப்பாண தென்மோடி கூத்து மரபு ஓராள் ஆற்றுகைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு, கலைஞர் கௌரவிப்பு என்பனவும், சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் ‘நொண்டி நாடகம்’ தென்மோடி நாட்டுக்கூத்தும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.11.2023இல் வெளியிடப்பெற்றது.